NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 15 July 2015

# ஆர்வமும் உழைப்பும் தந்த தேர்ச்சி

வனிதா மணியரசு

*தேர்ந்தெடுத்த துறையில் வளர்த்துக்கொண்ட ஆர்வத்தால் கல்விப் பயணத்தில் முதல் தரத் தேர்ச்சி பெற்றுள்ள இருவரது வெற்றிக் கதைகள்.*

ஆய்வுப் பணிகளில் ஆர்வம் கொண்ட வெள்ளையப்பன் தெய்வநாயகம், சூரிய மின்கலத்தில் பாஸ்பரத்தைப் பயன்படுத்தும் சாத்தியம் குறித்து ஆராய்ந்து அதற்குச் சிறந்த இறுதி ஆண்டு திட்டப்பணிப் படைப்பு விருதையும் தட்டிச் சென்றுள்ளார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் பொறியியல் அறிவியல் துறையில் இளங்கலைப் பட்டப் படிப்பு மேற்கொண்ட அவர், முதல் தர மாணவராகத் தேர்ச்சிபெற்று உள்ளார்.

கல்வியில் சிறந்து விளங்கிய இவர் நான்கு ஆண்டுகளில் மூன்று முறை 'டீன்ஸ் லிஸ்ட்' எனப்படும் பல்கலைக்கழகத் தலைவரின் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

மாணவர் பரிமாற்றத் திட்டத்தில் சுவீடனில் இருக்கும் ராயல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் வாய்ப்பும் பெற்றார் வெள்ளையப்பன்.

"கலாசாரம், வானிலை, உணவு எனப் பல விதங்களிலும் சிங்கப்பூரிலிருந்து சுவீடன் வேறுபட்டு இருந்தது. பல புதிய அனுபவங்கள் எனக்கு நல்ல பாடங்களைக் கற்றுக்கொடுத்தன," எனக் குறிப்பிட்ட வெள்ளையப்பன் வெளிநாட்டுக் கல்வி உலகளாவிய புரிதலை ஏற்படுத்தியதாகக் குறிப்பிட்டார்.

தேசியப் பல்கலைக்கழகத்தில் உள்ள தெம்புசு கல்லூரி வளாகத்தில் தங்கிப் படிக்கும் திட்டத்திலும் வெள்ளையப்பன் பங்கேற்றார். அதன் மூலம் மற்ற மாணவர்களுடன் பல அறிவியல் கலந்துரையாடல்களில் ஈடுபடும் வாய்ப்புக் கிடைத்ததாகக் கூறினார் வெள்ளையப்பன்.

மூன்று மாத காலத்திற்கு தற்காப்பு அறிவியல் அமைப்பில் உள்ளகப் பயிற்சி மேற்கொண்ட வெள்ளையப்பன், தாம் படித்ததை அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை அது உணர்த்தியதாகக் கூறினார்.




பெற்றோருடன் வெள்ளையப்பன் தெய்வநாயகம் (நடுவில்).
**படங்கள் : சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம்**

இதுவரையிலான தமது வாழ்க்கை நிறைவாக இருக்கிறது என கூறும் வெள்ளையப்பன், குடும்பத்தினரின் ஆதரவால்தான் இது சாத்தியமானது என்றார்.

வருங்காலத்தில் அறிவியல் தற்காப்புத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவில் பணிபுரியவிருக்கும் இவர், "ஆர்வம் மிகவும் முக்கியம். அதன் வழியாக இளையர்கள் தங்களைச் ஊக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். வாய்ப்புகளை நாம்தான் உருவாக்க வேண்டும்," என்றார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டு 10,219 பேர் இளங்கலைப் பட்டம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறந்த கல்வியோடு சேவையிலும் ஆர்வம்

> "ஆர்வமும் கடின உழைப்பும்தான் அனைத்துக்கும் அடித்தளம். நேரத்தை சரியாகப் பயன்படுத்தி குறிக்கோளை நோக்கிச் செயல்பட்டால் யாருக்கும் வெற்றி சாத்தியமே.

**குமாரி எஸ்.ஐஸ்வர்யா**




உயிர் அறிவியல் துறையில் முதல் தர மாணவியாகத் தேர்ச்சிபெற்று இளங்கலைப் பட்டம் பெற்றுள்ளார் ஐஸ்வர்யா.

பட்டப்படிப்புக் காலத்தில் பிரேசில், லண்டன், மேற்கு திமோர் போன்ற நாடுகளுக்குச் சென்று பலவிதமான மக்களுடன் பழகும் வாய்ப்புப் பெற்ற குமாரி எஸ். ஐஸ்வர்யா, கல்வியோடு சமூக சேவையிலும் ஆர்வம் கொண்டு உள்ளார்.

பிரேசிலில் பல சிங்கப்பூர் நிறுவனங்களின் பெயர்களைக் கண்டு, உலக அளவில் சிங்கப்பூர் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்துகொண்டதாகக் கூறினார் ஐஸ்வர்யா.

மாணவர் பரிமாற்றத் திட்டத்தில் லண்டன் பல்கலைக் கழகக் கல்லூரியில் ஆறு மாதம் தங்கிப் படித்தது ஐஸ்வர்யாவுக்கு சுதந்திரத்தை சரியாகப் பயன்படுத்தி வாழ கற்றுத் தந்துள்ளது.

வெளிநாட்டுச் சமூக சேவையிலும் ஈடுபடும் இவர், வளர்ந்து வரும் நாடான மேற்கு தீமோருக்குச் சென்று பல சமூக உதவிப் பணிகளை ஆற்றியுள்ளார்.

2011ல் சிங்கப்பூர் காவல் துறையின் உபகாரச் சம்பளம் பெற்ற ஐஸ்வர்யா, காவல் துறையில் பணியாற்ற உள்ளார்.

குற்றப் புலனாய்வுத் துறையில் தீவிர பாலியல் குற்றப் பிரிவில் வேலை செய்ய ஆர்வம் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார் குமாரி எஸ். ஐஸ்வர்யா.

"ஆர்வமும் கடின உழைப்பும் தான் அனைத்துக்கும் அடித்தளம். நேரத்தை சரியாகப் பயன்படுத்தி குறிக்கோளை நோக்கிச் செயல்பட்டால் யாருக்கும் வெற்றி சாத்தியமே," என்றார் அவர்.

வேலை உலகத்தில் காத்திருக்கும் புதுவிதமான அனுபவங்களையும் சவால்களையும் எதிர்நோக்க மிகவும் ஆர்வமாக இருப்பதாகக் கூறினார் குமாரி எஸ். ஐஸ்வர்யா.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.